Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 310

வெள்ளிக்கிழமை
03 ஒக்ரோபர் 2025

புரட்டாதி 17 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

க.பொ.த. சா/த

## விண்ணப்பத் திகதி நீடிக்கப்படாது

கொழும்பு, ஒக். 3
கல்விப் பொதுத் தராதர சாதாரணதரத் தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் நீடிக்கப்படாது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.
கல்விப் பொதுத் தராதர சாதாரணதரத் தேர்வுக்கு செப்ரெம்பர் மாதம் 18ஆம் திகதிமுதல் விண்ணப்பங் 11

செம்மணிப் புதைகுழி

# மூன்றாம்கட்ட அகழ்வுக்கு நிதி விரைவில் விடுவிப்பு!

அமைச்சர் ஹர்ஷன உறுதி



**கொழும்பு, ஒக். 3**
**அரியாலை - செம்மணிப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கான நிதி விரைவில் விடுவிக்கப்படும் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.** 11



## காற்றாலை வேண்டும்; மன்னாரில் போராட்டம்

மன்னார், ஒக். 3
மன்னாரில் காற்றாலைத் திட்டங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது. இளைஞர்கள் சிலர் ஒன்றிணைந்தே இந்தப் போராட்டத்தை முன் 11 னெடுத்தனர்.

## மதுசாரப் பாவனையால் தினமும் 50 பேர் இறப்பு

போதை தடுப்பு மையம் தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 3
மதுப் பாவனை காரணமாக, இலங்கையில் தினமும் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் உயிரிழக்கின்றனர் என்று போதைப்பொருள் தடுப்பு மையம் தகவல் வெளியிட்டுள்ளது. 11

## முதலீட்டு கொள்கையில் முரண்பட்ட தன்மைகள்!

அமெரிக்கா அதிருப்தி

விரிவு பக்கம்:- 05

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை விட

# ஆபத்தான சட்டமொன்றை கொண்டுவர அரசு திட்டம்!

சிறிதுங்க ஜயசூரிய குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 3
பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டாலும் அதை விடவும் பாரதூரமான சட்டமொன்றை கொண்டுவருவதே அரசாங்கத்தின் திட்டமாக உள்ளது என்று ஐக்கிய சோஷலிசக் கட்சியின் பொதுச்செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய உதயனிடம் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-
பயங்கரவாதத்தடைச்சட்டம் நீக்கம் தொடர்பில் வழங்கப்பட்ட உறுதிமொழியை மறந்துவிட்டே அரசாங்கம் 11

மஹிந்தவின்

## பாதுகாப்புப் பிரதானி நெவிலுக்கு மறியல்!

கொழும்பு, ஒக். 3
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பிரதான பாதுகாப்பு அதிகாரி நெவில் வன்னியாராச்சி ஊழல் மோசடிக் குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
ஊழல் மோடிகள் மற்றும் சட்டவிரோதச் சொத்துச் சேகரிப்புத் தொடர்பில் நெவில் நேற்றுக் கைது 11

இம்மாத இறுதிக்குள்

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நிச்சயமாக நீக்கியே தீருவோம்!

அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 3
பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. இம் மாத இறுதிக்குள் அந்த நடவடிக்கை முழுமை 11



முச்சந்தி முரளி

'நீக்கிறம் நீக்கிறம் எண்டு சொல்லி இழுத்தடிக்கிறது தானே அரசாங்கங்களின்ர வேலை கண்டியளோ'

## பருத்தித்துறை மீனவர்களின் வலைகள் பல அறுத்தழிப்பு!

இந்திய மீனவர்கள் அட்டூழியம்

யாழ்ப்பாணம், ஒக். 3
வடக்குக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளால், மயிலிட்டி, பருத்தித்துறையைச் 11



வடக்கு மாகாணத்தில்

## இவ்வருடத்தின் இறுதிக்குள் போதை மறுவாழ்வு மையம்

யாழ்ப்பாணம், ஒக். 3
வடக்கு மாகாணத்தில் உயிர்க்கொல்லிப் போதைப் பொருளுக்கு அடிமையானோருக்கு மறுவாழ்வு வழங்கும் வகையில், இந்த ஆண்டின் இறுதிக்குள் ஏதாவது ஓரிடத்தில் மறுவாழ்வு நிலையத்தை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
வடக்கு மாகாணத்தில் உயிர்கொல்லி போதைப் பொருளுக்கு அடிமையா 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 02.10.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4212
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 28 32 54 61
விசேட எழுத்து W

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 02.10.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1279
வெற்றி இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 10 23 30 53

**NLB ஜய**
திகதி 02.10.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0238
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 5 8 3 1

**மெகா பவர்**
திகதி 02.10.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2318
ஆங்கில எழுத்து I
சுப்பர் இலக்கம் 15
வெற்றி இலக்கங்கள் 18 26 40 80

**மஹஜன சம்பத**
திகதி 02.10.2025
சீட்டிழுப்பு இலக்கம் 5970
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 9 7 6 3 5 8

**தன நிதானய**
திகதி 02.10.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2000
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 18 32 48 66
விசேட எழுத்து A

**அத சம்பத**
திகதி 02.10.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0545
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 6 3 5 8

**சுப தவசக்**
திகதி 02.10.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0086
வெற்றி இலக்கினம் கடகம்
வெற்றி இலக்கங்கள் 03 27 34 44

# உரிமைக்காகப் போராடும் மக்கள்மீது அடக்குமுறையை பிரயோகிக்கிறது அரசு

## முஜிபுர் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.3

**மன்னார் காற்றலைத்திட்டம் தொடர்பாக மக்களால் முன்னெடுக்கப்படும் போராட்டங்களுக்கோ, சூழலியலாளர்களின் கருத்துகளுக்கோ அரசாங்கம் முக்கியத்துவம் அளிக்கவில்லை. எதிர்க்கட்சிகள் மட்டுமன்றி தமது உரிமைகளுக்காகப் போராடும் மக்கள்மீதும் அடக்குமுறை பிரயோகிக்கப்படுகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தத் திட்டத்தால் சுற்றுச்சூழலுக்கும், பறவைகளுக்கும் பாரிய பாதிப்புகள் ஏற்படும் என சூழலியலாளர்கள் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர். ஆனால் அரசாங்கம் மக்களின் போராட்டங்களுக்கோ, சூழலியலாளர்களின் கருத்துகளுக்கோ முக்கியத்துவமளிக்காமல் அவற்றை உதாசீனப்படுத்துகிறது. இவற்றுக்குப் பதிலளிப்பதற்கு ஆளுந்தரப்பில் எவரும் முன்னுரிமையளிக்கவுமில்லை.

இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படும்போது சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்தாலோசித்து பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். ஆனால் அரசாங்கத்திடமிருந்து இதுவரையில் மக்களின் கேள்விகளுக்கு பதில் எதுவும் கிடைக்கவில்லை. கலகம் அடக்கும் பிரிவினரை அனுப்பி அவர்களைத் தாக்குவதே அரசாங்கத்தின் பதிலாகவுள்ளது.

மஹிந்த ராஜபக்சவைச் சந்திக்கச் சென்றதைத்தவிர ரணில் செய்த அனைத்தையும் அநுர தொடர்ந்து கொண்டிருக்கின்றார். எதிர்க்கட்சிகள் மாத்திரமின்றி தமது உரிமைகளுக்காகப் போராடும் மக்கள்மீதும் அடக்குமுறை பிரயோகிக்கப்படுகிறது. இவ்வாறான வழிமுறைகளை கைவிட்டு மக்களுடன் சுமுகமான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவேண்டும் என்று அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம் - என்றார். (எ-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி 02.10.2025
தினம் வியாழக்கிழமை
வெற்றி வாரம் 0678
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கம் 8 1 0 5 3 5

**Super Ball**
திகதி 02.10.2025
தினம் வியாழக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2944
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கம் 03 52 62 79

**சனிதா**
திகதி 02.10.2025
தினம் வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கம் 01 04 44 60
வெற்றி வாரம் 5005

**SASIRI**
திகதி 02.10.2025
தினம் வியாழக்கிழமை
வெற்றி வாரம் 0782
வெற்றி இலக்கம் 07 14 38

**லக்ன ராசி**
திகதி 02.10.2025
தினம் வியாழக்கிழமை
மகரம்
வெற்றி இலக்கம் 03 19 53 56
சீட்டிழுப்பு வாரம் 4656

**KAPRUKA**
திகதி 02.10.2025
தினம் வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து K
சுப்பர் இலக்கம் 40
வெற்றி இலக்கம் 03 11 18 27
வெற்றி வாரம் 2120

**அத கோடிபதி**
திகதி 02.10.2025
தினம் வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கம் 08 40 46 75
வெற்றி வாரம் 2770

# ரிசாத்தின் மனு விசாரணைக்கு

கொழும்பு,ஒக்.3

முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீன், 2021ஆம் ஆண்டு எந்தவொரு நியாயமான காரணமுமின்றி தான் கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டதற்கு எதிராகத் தாக்கல்செய்த அடிப்படை உரிமைகள் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அதன்படி இந்த மனுமீதான விசாரணை எதிர்வரும் 2026 மார்ச் 25 அன்று இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# விஜேராம மாவத்தை வீட்டை கையளிக்காதுள்ள மஹிந்த

## அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.3

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கொழும்பு விஜேராம மாவத்தையில் உள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தை இன்னும் உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கவில்லை என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அமைச்சால் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி விஜேராம இல்லத்தைவிட்டு வெளியேறி மூன்று வாரங்கள் கடந்துவிட்டன, எனினும் அதிகாரப்பூர்வமாக பொது நிர்வாக அமைச்சகத்திடம் வீட்டை ஒப்படைக்கவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, முன்னர் அமைச்சர்கள் வசித்த வீடுகள் மூடப்பட்டுக் கிட்டத்தட்ட ஒரு வருடம் ஆகியும், இந்த விடயத்தில் அரசாங்கம் இன்னும் உறுதியான முடிவை எட்டவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. அதனால் அந்த வீடுகள் நாளுக்கு நாள் பாழடைந்து வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



# சொப்பிங்பை இலவசம்; தடுப்பதற்கு வர்த்தமானி

கொழும்பு,ஒக்.3

பொருள்கள் கொள்வனவின்போது சொப்பிங் பைகளை இலவசமாக வழங்குவதைத் தடுத்து வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் வகையில், நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையினால் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த சொப்பிங் பைகளுக்கு அறவிடப்படும் தொகை நுகர்வோருக்கு வழங்கப்படும் பற்றுச்சீட்டில் குறிப்பிடப்படவேண்டுமென அந்த வர்த்தமானியில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## சிறுவர் தினத்தில்

# பாடசாலையில் மது அருந்திய மாணவர்கள் மூவர் கைது

கொழும்பு,ஒக்.3

மொனராகலை, ஹூலந்தாவப் பகுதியில் உள்ள ஒரு பாடசாலையில் சர்வதேச சிறுவர்கள் தினக் கொண்டாட்டத்துக்காக மதுபானம் கொண்டுசென்ற பாடசாலை மாணவர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பாடசாலை வளாகத்தில் மது அருந்திக் கொண்டிருந்தபோது குறித்த மாணவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# மன்னார் சாத்வீகப்போராட்டம்; அரசாங்கம் ஒடுக்குவது தவறு!

## ஸ்ரீநேசன் எம்.பி. தெரிவிப்பு

மன்னார்,ஒக்.3

மன்னார் மாவட்டத்தில் காற்றாலைத்திட்டம் தொடர்பாக, மன்னார் மக்களின் எதிர்ப்புப்போராட்டம் 60 நாள்களாக நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. அதனைத் தேசிய மக்கள் சக்தி அரசு மதிக்கவேண்டும். மாறாக மிதிக்க நினைக்கக் கூடாது என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொலிஸார் மக்களை அடக்குவதற்காக, பலாத்காரத்தைப் பயன்படுத்தியுள்ளனர். கடந்த காலத்தில் தமிழரசுக் கட்சியின் அகிம்சைப் போராட்டத்தினை பேரினவாதத் தலைமைகள் பலாத்கார வன்முறையில் 30 ஆண்டுகள் அடக்கியதால், தமிழ் இளைஞர்கள் 30 ஆண்டுகள் ஆயுதம் ஏந்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

மதத்தலைவர்கள் பந்தாடப்படுவது மக்களைக் கொதிப்படையச் செய்யும் என்பதை இந்த அரசாங்கம் உணரவேண்டும். மறுத்தால் தமிழ்மக்கள் மிக விரைவாக இந்த அரசுமீது நம்பிக்கை இழந்துவிடுவர். அவர்களை எதிர்மறையான நிலைக்கு இந்த அரசு தள்ளக்கூடாது - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தமிழர்களுக்கான தீர்வை வழங்க தற்போதைய அரசும் தயாரில்லை

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.3

**தமிழ் மக்கள் தங்கள் சுயநிர்ணய உரிமையை உறுதி செய்கின்ற மரபுவழித் தாயகத்தை நிலைபேறாகக் கொண்ட அரசியல் தீர்வையே எதிர்பார்க்கின்றனர். அவ்வாறான தீர்வை வழங்குவதற்கு தற்போதைய அரசாங்கம் தயாராக இல்லை என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் தெரிவித்துள்ளார்.**

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் செம்மணி வளைவுப் பகுதியில் நடத்தப்பட்ட சுழற்சி முறை உணவு தவிர்ப்புப் போராட்டத்தின் இறுதிநாளான நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் அரசியல் கைதிகளை விடுதலை செய்வோம் என்று வாக்குறுதியளித்தே தமிழ் மக்களின் வாக்குகளைப்பெற்றது.

ஆனால் ஆட்சிக்கு வந்ததும் அரசியல் கைதிகளை விடுவிக்கமுடியாது என்று கூறியிருப்பது அரசாங்கத்தின் ஏமாற்றுத்தனத்தையே காட்டுகின்றது.

எந்வொரு அரசாங்கமும் இதுவரை தமிழ் மக்களுக்குத் தீர்வுதர முன்வராத நிலையில், தமிழர்களுக்கான நீதியை சர்வதேசத்தால் மட்டுமே பெற்றுத்தரமுடியும் என்று நாம் உறுதியாக நம்புகின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ-66)

# போதனாசிரியர்களுக்கு விண்ணப்பம் கோரல்!

யாழ்ப்பாணம்,ஒக்.3

வடக்கு மாகாண பொதுச்சேவையின் கீழ் காணப்படும் கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் தரம் III இல் 20 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், விவசாயப் போதனாசிரியர் தரம் III இல் 27 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் கோரப்பட்டுள்ளதாக மேற்படி ஆணைக்குழுவின் செயலாளர் ஆ.சிறி அறிவித்துள்ளார்.

இதுதொடர்பான முழுமையான அறிவித்தலை WWW.NP.GOV.LK எனும் வடக்கு மாகாண சபையின் இணையத்தள முகவரியின் ஊடாகப் பார்வையிட முடியும். தகைமையுடையவர்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (ச-66)

# சுற்றுலாத்துறையால் சாதனை முறியடிப்பு

கொழும்பு, ஒக்.3

செப்ரெம்பர் மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை, 2018 ஆம் ஆண்டில் பதிவான முந்தைய சாதனையை முறியடித்து, இதுவரை இல்லாத அளவுக்கு உயர்ந்த நிலையை எட்டியுள்ளது.

இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் கூற்றுப்படி, 2025ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இலங்கைக்கு மொத்தம் 158,971 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர். இந்த எண்ணிக்கை 2018 ஆம் ஆண்டின் நாட்டிக்கு வந்த 149,087 சுற்றுலாப் பயணிகளின் அளவை விட அதிகமாகும். இது 2024 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்துடன் ஒப்பிடும்போது 30.2 சதவீதம் அதிகரிப்பைக் காட்டுகிறது. என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (ச-இ)

# சிறுமி துஷ்பிரயோகம்; பொலிஸுக்கு கடூழியம்

கொழும்பு, ஒக்.3

16 வயதுக்குட்பட்ட சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் பொலிஸ் அதிகாரியொருவருக்கு ஹோமாகம உயர்நீதிமன்றம் 14 வருடங்கள் கடூழியச் சிறைதண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளது.

தீர்ப்பு வழங்கப்பட்ட நேரத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவர் இங்கிரிய பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# தேசிக்காய் விலையுயர்வு

கொழும்பு, ஒக்.3

தற்போது ஒரு கிலோ தேசிக்காய் 1700 முதல் 1800 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாக சந்தை வட்டாரம் தெரிவித்துள்ளது. தேசிக்காய் அறுவடை வீழ்ச்சியடைந்துள்ளதால் அதன் விலை உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# கல்மடுக்குளத்தின் கீழ் பெரும்போகம் ஆரம்பம்

கிளிநொச்சி,ஒக்.3

கிளிநொச்சி மாவட்டத்தின் மிகப்பெரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றான கல்மடுக் குளத்தின்கீழான 2025-2026 ஆம் ஆண்டுக்கான பெரும்போக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பிலான கலந்துரையாடல் கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன் தலைமையில், பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது நெற்செய்கைக்கான விதைப்புக் காலப்பகுதி எதிர்வரும் நவம்பர் மாதம் 5ஆம் திகதி வரை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. மேலும் நீர்ப்பாசனத்துக்கான ஆரம்ப காலப்பகுதியாக 05.11.2025 ஆம் திகதி தொடக்கம் 15.02.2026ஆம் திகதி வரை நிர்ணயிக்கப்பட்டதுடன் 28.02.2026 அறுவடைக்கான முடிவு திகதியாக தீர்மானம் எடுக்கப்பட்டது. (ச-55)

# பிஞ்சில பழுத்தது

ஓடுமீன் ஓடி உறுமீன் வருமளவுக்கு வாடியிருக்கிற கொக்கு மாதிரி, நவராத்திரி விரதம் எப்ப வருமெண்டு சிலர் காத்திருப்பினம். அதுவும் வாணிவிழா, வீட்டுப்பூசை எண்டால் எல்லாச் சனமும் பழக்கடைக்குத்தான் படையெடுப்பினம். இதைவிட்டால் வேற சான்ஸ் கிடைக்காது எண்டதால, அண்டைக்கு கடைக்கு வாறவையின்ர தலையில எல்லாப் பழத்தையும் கட்டிடுவினம். பழங்கள் உடம்புக்கு நல்லதுதானே, அதை வித்தால் என்ன பிழை? எண்டு சிலர் யோசிக்கலாம். சாதாரண நாளில பழம் வாங்கப் போறவை ஆயிரத்தெட்டுக் கேள்வியள் கேப்பினம். அதுவும் வாழைப் பழம் எண்டால் சொல்லவே வேண்டாம். "மருந்தடிக்காத பழம் தானே?" எண்டதுதான் வாங்கப் போறவையின்ர முதல் கேள்வியா இருக்கும். அந்தக் கேள்வி கேட்டதுமே கடைக்காரர் உசாராயிடுவார். "பேய்க்கதை கதைக்கிறியள். நாங்கள் மருந்தடிக்கிறேலை. புகைதான் போடுறனாங்கள்" எண்டு சொல்லி, மருந்தடிச்ச பழத்தை விட்டுட்டு நல்லபழம் உள்ள குலையில ஒரு சீப்பை வெட்டிக் குடுப்பார். அப்பிடிக் கடைக்காரர் சொன்னாலும் வாங்கப்போறவை அந்தப் பழத்தை ஒண்டுக்கு நாலுதரம் சுத்திச் சுழண்டு பாத்து, அதில அழுகல் இருந்தால் அதை விட்டிட்டு அடுத்த சீப்பை வெட்டச் சொல்லி பெரும்பாடு படுத்துவினம்.

ஆனால் நவராத்திரி மாதிரி எல்லா வீடுகளிலையும் வாழைப்பழம் தேவைப்படுற நாள்களில விட்டதையெல்லாம் பிடிக்கிற வேலையில பழக்கடைக்காரர் இறங்குவினம். அதிலையும் இந்தமுறை ஒரு முடிவோட இறங்கியிருக்கினம். இந்தமுறை கொஞ்சநாளைக்கு முதல் காத்தோட பெய்த மழையில முத்தின வாழைக்குலையளில கனக்க பாறுண்டு போட்டுது. அதால இந்தமுறை நவராத்திரி விரதத்துக்கு முத்தின குலையளுக்குத் தட்டுப்பாடு. எண்டாலும் எல்லாக் கடையளிலையும் தாராளமா மஞ்சளோ மஞ்சள் எண்டு வாழைக்குலையள் தொங்கிக்கொண்டுதான் இருந்தது. எல்லாமே கடைக்காரரின்ர கைங்கரியம்தான். முத்தல், பிஞ்சு எண்டு பாக்காமல் எல்லா வாழைக்குலையளையும் வெட்டிக்கொண்டந்து, மருந்தில குளிப்பாட்டினால், அடுத்த நாளே எல்லாக்குலையும் மஞ்சளடிச்சுப் போய்த்தான் இருக்கும். அதைப்பார்த்திட்டு "நல்ல பழம்" எண்டு வாங்கிக் கொண்டுவந்து வைச்சால், நாலைஞ்சு மணித்தியாலத்திலேயே மேக்கப் அழிஞ்ச மாதிரி அந்த வாழைச்சீப்பு தன்ர சுயரூபத்தைக் காட்டும். எல்லாப் பழமும் கறுத்துப் போய், சீப்பில இருந்து தன்ரபாட்டிலேயே கழண்டு விழத் தொடங்கிடும். அதைப் பூசைக்கும் வைக்கேலாமல், சாப்பிடவும் ஏலாமல் கடைசியில குப்பையிலதான் எறியவேண்டி இருக்கும். இந்தமுறை அப்பிடிக் கனபேர் மருந்தடிச்ச பழத்தை வாங்கியந்திட்டு, இப்பிடி ஏமாந்திருக்கினம். அதிலையும் "நாளைக்கு வீட்டுப்பூசை. அதால பழம் கிடைக்காது, இண்டைக்கே வாங்கி வைப்பம்" எண்டு முன்னெச்சரிக்கையா முதல்நாளே வாழைப்பழத்தை வாங்கினவையின்ர பாடுதான் பெரும் பரிதாபம்.

இப்பிடி பண்டிகை, விரத காலங்களில கூடுதலா மருந்தடிப்பினம் எண்டது பொதுவாவே எல்லாருக்கும் தெரியும். அப்பிடித் தெரிஞ்சும் ஒருத்தரும் அதைக் கட்டுப்படுத்துறேலை. முக்கியமா இந்தநேரங்களில பழக்கடையளுக்கு பி.எச்.ஐ. மார் பாய்ஞ்சினம் எண்டால் மருந்தும் பழமுமா இருக்கிறவையை அப்பிக்கொண்டு போகலாம். ஆனால் அவையள் அதைச் செய்யிறேலை. பண்டிகை, விரத காலத்தில பி.எச்.ஐ.மார் வரமாட்டினம் எண்டது பழக்கடைக்காரருக்கும் தெரியும். அதால அவையும் கூச்சநாச்சம் இல்லாமல் மருந்தை அடிச்சு, பழங்களை பிஞ்சிலையே பழுக்க வைச்சு காசாக்கிப் போடுவினம். அந்த மருந்தடிச்ச பழங்களை வாங்கி, சாப்பிட்டு உலையிறது அப்பாவிச் சனங்களெல்லோ. அடுத்ததா கந்தசட்டி விரதத்துக்கும் பழங்களுக்கு உந்த மருந்தடிக்கிற விளையாட்டு நடக்கும். அப்பவாவது பி.எச்.ஐ.மார் கொஞ்சம் பழக்கடைப் பக்கம் பாய்வினமோ?

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்
(ராசிபலன்)

**மேடம்:** காரிய அனுகூலமான நாள். புதிய முயற்சிகளை மேற்கொள்வதற்கு உகந்த நாள். தேவையான பணம் கையில் இருப்பதால் செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சிதரும்.

**இடபம்:** எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். சிலருக்குப் பிள்ளைகள்மூலமும் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணையால் செலவுகள் ஏற்படும். மற்றவர்களுடன் வீண்விவாதம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது. தந்தையின் உடல்நலனில் கவனம் செலுத்தவும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். சிலருக்கு மனதில் இனந்தெரியாத சோர்வு உண்டாகலாம். அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுடன் அனுசரணையாக நடந்துகொள்ளவும். உடல்நலனில் கவனம் தேவை.

**கடகம்:** தந்தைவழி உறவுகளால் சங்கடம் ஏற்படக்கூடும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணையின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். தொடங்கிய காரியங்கள் அனுகூலமாகமுடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார்.

**கன்னி:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் அதற்கேற்ப பணவரவும் இருப்பதால் பிரச்சினை எதுவும் இருக்காது. எதிரிகள்வகையில் எச்சரிக்கையாக இருக்கவும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**துலாம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.வாழ்க்கைத்துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். முக்கியமான முடிவுகள் எதையும் இன்று எடுக்கவேண்டாம்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில்ஈடுபட வேண்டாம். சகோதரவகையில்எதிர்பார்க்கும்காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படும். பிள்ளைகளால் வீண் செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**தனுசு:** எதிர்பாராத பணவரவு ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாலையில் குடும்பத்தினருடன் உற்சாகமாகப் பேசி மகிழ்வீர்கள். எதிரிகள் பணிந்து போவார்கள்.

**மகரம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. சிலருக்கு சிறிய அளவில் ஆரோக்கியக் குறைவு ஏற்பட்டு சரியாகும்.

**கும்பம்:** பொறுமையுடன் இருக்கவேண்டிய நாள். முக்கியமான முடிவுகளை ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுடன் அனுசரணையாக நடந்துகொள்வது மிக அவசியம்.

**மீனம்:** கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்துவேற்றுமை நீங்கி, அந்நியோன்யம் ஏற்படும். மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது நல்லது.

படங்கள் ஐ. சிவசாந்தன்





நல்லூர்க் கந்தசுவாமி கோவில் நவராத்திரி கும்பபூஜை இறுதிநாளான நேற்றுக் காலை மானம்பூ உற்சவம் பக்தர்கள் புடைசூழ சிறப்புற இடம்பெற்றது. (ச-17,20)

# 'வியாக்ரன்' நூல் அறிமுக நிகழ்வு


யாழ்ப்பாணம், ஒக்.3

இ.சு.முரளிதரனின் 'வியாக்ரன்' நூல் அறிமுக விழா கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.


அதிபர் கே.கே.தவகீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதி அதிபர் த.லிங்கேஸ்வரன் வரவேற்புரையாற்றுவார். யாழ்.பல்கலைக்கழக சைவசிந்தாந்தத்துறைத் தலைவர் கலாநிதி த.செல்வமனோகரன் அறிமுகவுரை நிகழ்த்துவார். யாழ்.பல்கலைக்கழக சமூகவியற்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் கருத்துரை ஆற்றுவார். இந்த நூல் "ஜீவநதி கொமிக்ஸ்" இன் வெளியீடாக வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-25)



கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் மானம்பூ உற்சவமும், ஏடு தொடக்கலும் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றன.
நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் கலந்துகொண்டு சிறார்களுக்குச் சம்பிரதாயபூர்வமாக ஏடு தொடக்கிவைத்தார். (ச-66)



நவராத்திரியின் சரஸ்வதி பூஜைத் திருநாளை (ஆயுத பூஜை) முன்னிட்டு யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நேற்றுமுன்தினம் புதன்கிழமை வியாபாரம் சூடுபிடித்திருந்தது. யாழ்.மாவட்டத்தின் சந்தைகளில் ஒன்றான திருநெல்வேலிப் பொதுச் சந்தையிலும், சந்தைக்கு முன்பாக ஆடியபாதம் வீதியோரமாகவும் பழங்கள், கரும்பு, இளநீர் உள்ளிட்ட பொருள்களின் வியாபாரம் களைகட்டியிருந்தது. (ச-66)



பருத்தித்துறை நவீன சந்தை கட்டடத்தொகுதி வர்த்தகர்களினால் முன்னெடுக்கப்பட்டு வந்த நவராத்திரி விழா வாழைவெட்டு பூசையுடன் இடம்பெற்று நிறைவடைந்தது. (ச-100)

# கேதாரகௌரி விரதம் நேற்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம்,ஒக்.3

கேதாரகௌரி விரதம் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகிய நிலையில் எதிர்வரும் 21 ஆம் திகதி காப்புக் கட்டுதலுடன் நிறைவுபெறவுள்ளது. கேதார கௌரி விரதத்தை முன்னிட்டு பருத்தித்துறை சிவன் கோவிலில் தினமும் சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. 20 தினங்களும் காலை 9 மணிக்கு அம்பாளுக்கு விசேட அபிசேகம் இடம்பெற்று 10 மணிக்கு மூலமூர்த்திப் பூசையும், 10.30 மணிக்கு வசந்த மண்டப் பூசையும் இடம்பெற்று 11.30 மணிக்கு விரதகாரர்கள் பூவும், தண்ணீரும், அம்பாள் திருப்பாதத்துக்குச் சமர்ப்பித்து வழிபாடு இடம்பெறும். கேதார கௌரி விரதத்தின் இறுதி நாளான 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காப்புக் கட்டுதல் இடம்பெறும். அன்றைய தினம் காலை 9 மணிக்கு அபிசேகம் ஆரம்பமாகி 10.30 மணியளவில் காப்பு வழங்கப்படும். (ச-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


# செம்மணியில் ஏன் தாமதம்?

செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வு நடவடிக்கைகள் நிதிஒதுக்கீடுகள் கிடைக்காததால் தாமதிக்கப்பட்டிருக்கின்றது. இது கடந்தகால அரசாங்கங்களின் வழியிலேயே தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் பயணிக்க முயல்கின்றதா என்ற சந்தேகத்தைத் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கின்றன. கடந்த காலங்களில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப்புதைகுழிகளின் அகழ்வு, ஆய்வு நடவடிக்கைகள் ஒரு கட்டத்தைத் தாண்டி நகராமல் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும்- தேக்கமடைந்திருக்கும்- ஒரு அங்குலம்கூட முன்னகராத நிலையில், தமிழ் மக்கள் மத்தியில் இவ்வாறான சந்தேகம் எழுவது தவிர்க்கமுடியாதது.

செம்மணி மனிதப்புதைகுழியில் இதுவரை 200க்கும் அதிகமான மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. சிறுவர்களுடையது என்று கருதப்படும் எலும்புக்கூடுகளும் அவற்றில் அடங்கியிருப்பதும் அவதானிக்கப்பட்டிருக்கின்றது. இந்த எலும்புக்கூடுகள் அருகருகே புதைக்கப்பட்ட விதமும், ஆழம் குறைவான நிலையில் புதைக்கப்பட்டிருப்பதும், இவை இயல்பான மரணங்கள் அல்ல என்பதற்கான பல சான்றுகளை வெளிப்படுத்தியிருக்கின்றன. தமிழர் தேசத்தில் நிகழ்ந்த இறுதிப்போரில் மட்டுமல்லாது, அதற்கு முன்னரும் பலர் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டிருக்கும் நிலையில், இடையிடையே வெளிச்சத்துக்குவரும் மனிதப்புதைகுழிகள், உண்மையை அறிவதற்கான வழிகளாகவும், பாதிக்கப்பட்ட குடும்பங்களின் நீதி எதிர்பார்ப்பின் சாட்சிகளாகவும் மாறிவிடுகின்றன. ஆனால் அவ்வாறான மனிதப்புதைகுழிகளின் அகழ்வுகள், ஆய்வுகள் இதுவரை திருப்தி தரும்வகையில் நடக்கவில்லை.இதுவரை பல மனிதப்புதைகுழிகள் அகழப்பட்டபோதும், ஆரம்ப நடவடிக்கைகளைத் தாண்டி அவை செல்லவில்லை. அகழ்வின் அறிவியல் அடிப்படையிலான முடிவுகள் உரியவாறு வெளிப்படுத்தப்படவில்லை. கடந்த அரசாங்கங்களால் அதற்கான போதியநிதி வழங்கப்படாமையும், அரசியல் விருப்பமின்மையும், உண்மையை வெளிக்கொணரும் நடவடிக்கைகளைத் தடுக்கும் காரணிகளாக அமைந்திருந்தன. அரசாங்கங்கள் உண்மையை வெளிக்கொணரத் தயங்கியிருப்பதன் காரணம், அரசியல் மற்றும் இராணுவப் பங்களிப்புகள் வெளிப்பட்டுவிடும் என்ற அச்சம்தான் என்பது பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் நிலவும் நம்பிக்கை. இதுவே பாதிக்கப்பட்ட மக்கள் சர்வதேசத்தின் தலையீட்டைக் கோருவதற்கும் பிரதான காரணமாக இருக்கின்றது.

தற்போது செம்மணி மனிதப்புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் நிலையில், அதன் அகழ்வு நடவடிக்கைகளுக்குத் தேவையான வளங்களைத் துரிதகதியில் வழங்கி, உண்மைகளை வெளிக்கொணரவேண்டிய அரசாங்கம் அதற்கான நிதி ஒதுக்கீட்டைத் தாமதப்படுத்தியிருக்கின்றது. செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வுகளைத் துரிதப்படுத்துவது அரசாங்கத்தின் கடமை மட்டுமல்ல; அது நாட்டின் உண்மையையும் வரலாற்றையும் வெளிக்கொணரவேண்டிய- பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுத் தரவேண்டிய ஒரு மிகப்பெரிய பொறுப்புமாகும். அரசாங்கம் போதுமான நிதி ஒதுக்கீடுகளை உடனடியாக வழங்கி, அகழ்வு நடவடிக்கைகள் தடையின்றி நடைபெறுவதை உறுதிசெய்யவேண்டும். அகழ்வின்போது கண்டுபிடிக்கப்படும் சான்றுகள் சர்வதேசதரத்துக்கு ஏற்ப பாதுகாக்கப்பட்டு, சட்டநடவடிக்கைகள் தாமதமின்றி முன்னெடுக்கப்படவேண்டும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




## நாளொரு நல்வார்த்தை

மனிதனுடைய மனக்கோட்டைகள்
எவ்வளவுதான் வானளாவி இருந்தாலும்
காலம் ஒரு தடவை 'ப்பூ' என்று ஊதும்போது
தரைமட்டமாகிவிடும்.

— காண்டேகர்—






# முதலீட்டுக் கொள்கையில் முரண்பட்ட தன்மைகள்!

## அமெ. இராஜாங்கத் திணைக்களம் அதிருப்தி

கொழும்பு, ஒக்.2

இலங்கையில் வெளிநாட்டு முதலீட்டுக்கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் முரண்பட்ட தன்மை காணப்படுகின்றது என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2025ஆம் ஆண்டுக்கான இலங்கையின் முதலீட்டுப்பின்னணி தொடர்பான அறிக்கையை வெளியிட்டுள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், இதுதொடர்பில் பல முக்கியமான விடயங்களைச் சுட்டிக்காட்டியுள்ளது.

தேசிய மக்கள்சக்தி அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒத்துழைத்து முதலீட்டாளர்களுக்கு உத்தரவாதம் அளித்தாலும், அரசாங்கத்தின் பழைய மேற்குலக எதிர்ப்பு மற்றும் மார்க்சிச செல்வாக்குக் கொண்ட சித்தாந்தங்கள் காரணமாக, பல முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதில் சந்தேகத்துடன் உள்ளனர் என்று அறிக்கை கூறுகிறது.

வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் முரண்பட்ட தன்மை காணப்படுகின்றது என்று கூறும் அமெரிக்கா, இலங்கை முதலீட்டுச்சபை பிரதான முதலீட்டு ஊக்குவிப்பு நிறுவனம் என்றபோதும், அவர்களுடன் நிலையான மற்றும் வெளிப்படையான உரையாடலைப் பேணுவது சவாலாக உள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

தேவையற்ற கட்டுப்பாடுகள், சட்ட நிச்சயமற்ற தன்மை மற்றும் அதிகாரிகளின் பலவீனமான பதிலளிப்பு போன்றவையும் இலங்கையில் முதலீடுசெய்வதற்கு உள்ள ஏனைய பிரச்சினைகளாக அந்த அறிக்கை பட்டியலிட்டுள்ளது. (எ-இ)

## சிறுவர் தினத்தன்று சிறுவன் உயிரிழப்பு

கொழும்பு.ஒக்.3

சர்வதேச சிறுவர்தினத்தன்று, வீட்டின் பின்புறம் உள்ள பாதுகாப்பற்ற கிணற்றில் விழுந்து 4 வயதுடைய சிறுவன் உயிரிழந்துள்ளார். நவகமுவப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சேனுகா நில்ஷான் ஹெட்டியாராச்சி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். வீட்டின் பின்புறம் உள்ள கிணறு வலையால் மூடப்பட்டிருந்தபோதும், சிறுவன் கிணற்றில் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். குறித்த சிறுவன், சிறுவர் தினமான நேற்றுமுன்தினம் பாலர்பாடசாலைக்குச் சென்று, சிறுவர்தினக் கொண்டாட்டத்தில் பங்கேற்று, பரிசுகளைப் பெற்று, வீடு திரும்பிய பின்னர் கிணற்றில் தவறி வீழ்ந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-இ)

## பழங்களின் விலை அதிகரிப்பு

நவராத்திரிப் பூசையை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் பழங்களின் விலை இம்முறை அதிகரித்துள்ளது.

திருநெல்வேலிச் சந்தையில் ஒரு கிலோ மாம்பழம் 900 ரூபாவுக்கும் பலாப்பழம் ஒரு துண்டு 500 ரூபாவுக்கும், விளாம்பழம் 100 ரூபாவுக்கும், கரும்புத் துண்டு 100 ரூபாவுக்கும், வாழைப்பழம் ஒரு கிலோ 300ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன. (க-17)



# மாணவருக்குப்போதைமாத்திரை விற்பனை செய்த பெண் கைது!

கொழும்பு, ஒக்.3

பாடசாலை மாணவர்களுக்குப் போதைமாத்திரைகள் விற்பனை செய்த குற்றச்சாட்டில் பெண் ஒருவர் மொனராகலைப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். மொனராகலை பிரதேசத்தில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் நடைபெற்ற சர்வதேச சிறுவர் தின நிகழ்வில் பங்கேற்பதற்குப் பொலிஸ் அதிகாரிகள் சிலர் சென்றுள்ளனர். பாடசாலையில் உள்ள சில மாணவர்களின் நடவடிக்கைகளில் சந்தேகமடைந்த அவர்கள் மாணவர்களை விசாரித்துள்ளனர். விசாரணையில் மாணவர்கள் மதன மோதக போதை மாத்திரைகளை உட்கொண்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு அங்குள்ள கடை ஒன்றில் சோதனை நடத்தி சந்தேகநபரைக் கைதுசெய்துள்ளனர். (எ-இ)

நாளை

சனிக்கிழமை - புரட்டாதி 18

04.10.2025

சுபநேரம் : 03.02 - 04.32
ராகுகாலம் : 09.02 - 10.32


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னகவை காணும் யாழ்.பல்கலைக்கழகம்

## திங்களன்று பெருவிழா

யாழ்ப்பாணம், ஒக்.3

**ஈழத்தமிழர்களின் தனிப்பெரும் அடையாளங்களில் ஒன்றாகத் திகழும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகளை நிறைவு செய்து, பொன்னகவைப் பெருவிழா காணவுள்ளது.**

ஐம்பதாவது ஆண்டைக் கடந்திருக்கும் இந்தப் பல்கலைக்கழகத்தின் பன்னிரண்டு பீடங்களும் இணைந்து பொன்விழா நிகழ்வை எதிர்வரும் 6ஆம் திகதி வெகுவிமரிசையாகக் கொண்டாடவுள்ளன.

இதன்போது இராமநாதன் மண்டபத்தையொட்டி விரிவாக்கம் செய்யப்பட்ட "கூடல் அவை" எனும் சபா மண்டபம் சம்பிரதாயபூர்வமாக சமய அனுஷ்டானங்களுடன் அன்றையதினம் காலை 6.30 மணியளவில் திறந்துவைக்கப்படவுள்ளது. தொடர்ந்து காலை 9 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ள பொன் விழா நிகழ்வுக்கு இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கபில செனிவிரத்ன பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கே. எல். வசந்தகுமார ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். பல்கலைக்கழகத்தின் ஐம்பது வருடகால கல்விப் பணி வரலாற்றை எடுத்தியம்பும் வகையில் அமைந்த வரலாற்றுப் பொக்கிஷமான 'யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொன்அகவை வரலாறு' எனும் நூலும், பல்கலைக்கழகத்தின் பொன்னகவையை நினைவுகூரும் வகையிலான நினைவு முத்திரை வெளியீடும் இடம்பெறவுள்ளன. நிகழ்வில் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டுக்குழு கேட்டுக்கொண்டுள்ளது. இதேவேளை இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகமாக 1974 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 6ஆம் நாள் ஆரம்பிக்கப்பட்ட இந்த உயர் கல்வி நிலையம், இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக வியாபித்து நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# பருத்தித்துறையில் வீடுகள் கையளிப்பு!

யாழ்ப்பாணம், ஒக்.3

பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் பிரிவில் அமைக்கப்பட்ட இரு வீடுகள் நேற்று வியாழக்கிழமை பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் ஒரு மில்லியன் ரூபா நிதிப்பங்களிப்பில் துன்னாலை வடக்கு , புலோலி மற்றும் மந்திகை ஆகிய பகுதிகளில் இந்த வீடுகள் அமைக்கப்பட்டுக் கையளிக்கப்பட்டுள்ளன. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ.ரஜீவன், ம பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் ந.திருலிங்கநாதன், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (ச-25,100)

# மன்னாரில் காற்றாலைத்திட்டம் இறுதிநேரத்தில் தடுப்பது கடினம்

## கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு

மன்னார், ஒக்.3

மன்னார் மாவட்டத்தில் காற்றாலைக் கோபுரங்கள் அமைப்பதற்கான பணிகள் இறுதிக்கட்டத்தை நெருங்கியுள்ளன. குழிகள் தோண்டப்பட்டு அடிக்கட்டுமான வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. இறுதிக்கட்டத்தில் அவற்றை நிறுத்துவது கடினம் என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் இந்தத் திட்டத்துக்கு பலகோடி ரூபா பணம் செலவழிக்கப்பட்டுள்ளது. கோபுரங்களை நிர்மாணிப்பதற்கான பணிகள் மாத்திரமே மீதமுள்ளன. எனவே மக்கள் அதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். இந்தப் பிரச்சினை ஜனாபதி மற்றும் அதற்குரிய அமைச்சர் அனைவரோடும் பேசப்பட்டது. கலந்துரையாடப்பட்டபோது எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு அமைவாகவே அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கனியமண் அகழ்வின்மூலமே மன்னாருக்கு அதிக ஆபத்து. அதனால் அதனைத் தடுத்துநிறுத்தி இருக்கின்றோம். இலங்கையில் இதற்கு முன்னர் அமைக்கப்பட்டுள்ள காற்றாலைக் கோபுரங்களைச் சென்று பாருங்கள். அந்தப் பிரதேசத்தில் மீன்கள் வரவில்லையா? உயிரினங்கள் வரவில்லையா? பறவைகள் வரவில்லையா? இயற்கைக்கு மாசு ஏதும் ஏற்பட்டிருக்கிறதா என்பதைப் பாருங்கள். அவ்வாறு தாக்கம் ஏற்பட்டிருக்குமாக இருந்தால் அது விஞ்ஞான ரீதியாகவும், தர்க்கரீதியாகவும் நிரூபிக்கப்படுமாக இருந்தால் நாங்களும் உங்களோடு சேர்ந்து எதிர்ப்பதற்குத் தயார்- என்றார். (க-20)



# தளபாட உற்பத்தி நிலையத்தில் தீ பெறுமதியான மரங்கள் நாசம்!

கிளிநொச்சி, ஒக்.3

மரத்தளபாட உற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில், பெறுமதியான மரங்கள் தீயில் கருகியுள்ளன.

கிளிநொச்சி உதயநகர்ப் பகுதியில் உள்ள உற்பத்தி நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. உரிமையாளர் அன்றைய தினம் மாலை நிலையத்தைப் பூட்டிவிட்டு வீடு சென்ற நிலையில், தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. இதனை அவதானித்தவர்கள் உரிமையாளருக்குத் தகவல் வழங்கிய நிலையில். உரிமையாளரால், கரைச்சி பிரதேசசபை தீயணைப்புப் பிரிவுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. பிரதேசசபையின் தீயணைப்புப் பிரிவினர் மற்றும் பொதுமக்களும் இணைந்து நீண்டநேரத்துக்குப் பின்னர் தீயைக்கட்டுப்படுத்தினர். தீவிபத்தில் சில இயந்திரங்கள் மற்றும் தளபாடங்கள் செய்வதற்காக வைத்திருந்த பெறுமதியான மரங்கள் என்பன தீயில் எரிந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-113)

# கலை வகுப்புகள் நீர்வேலியில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.3

நீர்வேலி கந்தசுவாமி கோயில் கந்தன் புராண இதிகாசப் பாடசாலையில் புதிய இலவசக் கலை வகுப்புகளின் ஆரம்ப விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ. இராசேந்திர சுவாமிநாதக் குருக்களின் ஆசியுரையுடன் இந்தக் கலை வகுப்புகள் ஆரம்பித்துவைக்கப்பட்டன. சங்கீதம் வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம், இசைநாடகம் போன்ற கலைப்பயிற்சிகள் மாணவர்களுக்கு பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-41-17)

# அச்சுவேலி தபால் நிலையத்தின் நிரந்தரக் கட்டடத்துக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், ஒக்.3

அச்சுவேலி தபால் நிலையத்துக்கான நிரந்தரக் கட்டடத்துக்கு நேற்று அடிக்கல் நடப்பட்டது. வல்லை அராலி வீதி அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் கொள்வனவு செய்யப்பட்ட காணியில் அடிக்கல் நடப்பட்டது. கடந்த பல தசாப்தகாலமாக அச்சுவேலி தபால் நிலையம் தனியார் வீடுகளிலும், தனியார் வாடகைக்கட்டடங்களிலும் இயங்கிவந்தது. அச்சுவேலி மக்களின் நிதிப்பங்களிப்புடன் வல்லை அராலி வீதியில் காணி கொள்வனவு செய்யப்பட்டது. தற்போது கட்டடம் அமைப்பதற்கான நிதிஒதுக்கீட்டை அஞ்சல் திணைக்களம் வழங்கியுள்ளது.

கட்டடத்துக்கான கட்டுமானப்பணிகள் இந்த வருடத்துக்குள் நிறைவுபெறும் என்று வடமாகாண தபால் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன், நாடாளுமன்ற உறுப்பினர் ராஜீவன், கோப்பாய் பிரதேச செயலர், அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் மதகுருமார் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் மிக வயதானவர்

கொழும்பு, ஒக். 3



இலங்கையின் மிக வயதான நபர் காலி மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளார். கரந்தெனியாவைச் சேர்ந்த பொல்லந்த ஹகுரு மெனியல் என்ற 110 வயதுடையவரே இலங்கையின் மிக வயதான மனிதராக தேசிய முதியோர் செயலகத்தால் உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.

பழைய தேசிய அடையாள அட்டையின்படி, 1915ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4 ஆம் திகதி கரந்தெனியாப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட அங்குலுகல்ல கிராம நிலாதாரி பிரிவில் இவர் பிறந்துள்ளார். அதிகாரிகளின் கூற்றுப்படி, அவர் தனது முழு வாழ்க்கையையும் அங்கேயே கழித்து, விவசாயம், கறுவா பயிரிடல் மற்றும் கிராம சமூகப் பணிகளில் ஈடுபட்டுவந்துள்ளார்.

110 வயதிலும் மெனியல் நல்ல உடல்நலத்துடன் உள்ளார் மற்றும் 5ஆம் தரம் வரை கல்வி கற்ற அவரால் தற்போதும் எழுதவும், படிக்கவும் முடியும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அவரது நீண்ட ஆயுளுக்கு எளிமையான வாழ்க்கை முறை மற்றும் நச்சுத்தன்மையற்ற உணவுப்பழக்கமே காரணம் என அவரது குடும்பத்தினர் கூறுகின்றனர். கிராமத்தில் நடைபெறும் பிரித் நிகழ்வுகளில் 75 வயது வரை தவறாமல் பங்கேற்று மத நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டவர் என உள்ளூர் மக்களால் அறியப்படுகிறார். மெனியல் ஒன்பது பிள்ளைகளின் தந்தையாவார். (எ-இ)

# அரியாலையைக் குப்பைமேடாக்க முயற்சிக்கின்றது பிரதேசசபை!


## குற்றஞ்சாட்டும் பிரதேச மக்கள் 8ஆம் திகதி எதிர்ப்புப் போராட்டம்

**யாழ்ப்பாணம், ஒக்.3**

**அரியாலைக் கிராமத்தைக் குப்பைமேடாக மாற்றும் நல்லூர்ப் பிரதேசசபையின் முயற்சிக்கு எதிராக எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணியளவில் அரியாலை கிழக்கு வீதிச் சந்தியில் பெரும் கண்டனப் போராட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று அரியாலைக் கிராம மக்கள் அறிவித்துள்ளனர்.**

இது தொடர்பாக அவர்கள் தெரிவித்துள்ளதாவது:-

"எமது நகரைச் சுத்தமாக்குகின்றோம்" என்ற போர்வையில் குப்பை சேகரிப்பதை மட்டும் முன்னிலைப்படுத்தி நற்பெயர் சம்பாதிக்க நினைக்கின்ற சபைகள் எந்தவொரு கிராமத்தை நாசமாக்காது விட்டுள்ளார்கள்? காக்கை தீவு கல்லுண்டாய்வெளி, இணுவில் காரைக்கால், யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் இந்து மயானப் பகுதி ஆகிய பகுதிகள் போன்று அரியாலையையும் இந்தப் பட்டியலில் இணைப்பதற்கு மக்களின் எதிர்ப்பையும் மீறி நல்லூர்ப் பிரதேசசபை முனைப்புடன் செயற்பட்டு வருகிறது. சபைகளிடம் முறையாகத் திட்டமிடப்பட்ட செயற்றிட்டங்கள் இல்லாதமையால் எமது கிராமங்களின் அழிவுக்குக் காரணமாக அமைய இடமளிக்கமுடியாது. எமது இருப்பையும், வாழ்வாதாரத்தையும், தங்களுடைய பொறுப்பற்ற செயலால் அழிக்கின்ற நல்லூர்ப் பிரதேச சபையின் செயற்பாட்டுக்கு எதிராக ஆர்வலர்கள் அனைவரும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் - என்றனர். (எ-66)



# அனுமதியற்ற கட்டடங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை!

யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கில் சில பிரதேசங்களில் அனுமதியின்றிக் கட்டப்பட்ட கட்டடங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ளது. வத்திராயன், மருதங்கேணி, உடுத்துறை ஆகிய பகுதிகளில் பிரதேசசபையின் அனுமதியின்றி இந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

அதனையடுத்து பருத்தித்துறை பிரதேசசபையினால் இந்தச் சிவப்பு நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ளது. (ச-27)



# பருத்தித்துறையில் மழலைகள் பூங்கா

யாழ்ப்பாணம், ஒக். 3

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை முனைப் பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பருத்தித்துறை நகரசபையின் ஏற்பாட்டில் சிறுவர் பூங்கா திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரபிதா வின்சன்டி போல் டக்ளஸ் போலின் வேண்டுகோளின் அடிப்படையில் தனுசா மரைன் நிறுவனத்தினரது அனுசரணையில் பருத்தித்துறை முனை கடற்கரை திடலில் இந்தச் சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. தனுசா மரைன் நிறுவன பொறுப்பதிகாரி மற்றும் நகர சபைத் தலைவர் ஆகியோர் குறித்த சிறுவர் பூங்காவின் பெயர்ப்பலகையினை திரைநீக்கம் செய்துவைத்தனர். (ச-100)

# மன்னார் நகரசபைக்குட்பட்ட உணவகங்கள் சோதனை

மன்னார், ஒக். 3



மன்னார் நகரசபைக்குட்பட்ட உணவகங்கள் மற்றும் வெதுப்பகங்கள் நேற்றுமுன்தினம் ஒரே நாளில் திடீர்ச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன் போது உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாது இயங்கிய ஒரு வெதுப்பகம் உட்பட 3 உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மன்னார் நகரசபை சுகாதரப் பரிசோதகர் மற்றும் சுகாதரக் குழுவினர் திடீர் கள ஆய்வை மேற்கொண்டனர். உரிய அனுமதியின்றி இயங்கிய உணவகங்கள், கழிவு நீர் உரிய முறையில் அகற்றப்படாமல் இயங்கி வெதுப்பகம், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாது உணவுகள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை உள்ளிட்ட பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகள் இதன் போது அடையாளம் காணப்பட்டன.

அதனடிப்படையில் குறித்த உணவகங்களுக்கு எதிராக நீதி மன்றில் இன்று வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. (க-213)

# ஆத்தியடி முன்பள்ளி சிறுவர்தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 3


சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை ஆத்தியடி சைவமன்ற முன்பள்ளிச் சிறுவர்களின் சிறுவர் தின நிகழ்வுகள் முன்பள்ளி பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் திருமதி ஜெயமீரா பிரதர்சன் தலைமையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றன. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கிருஷ்ணலதா குலசங்கர் பங்கேற்று சிறப்பித்தார். (ச-25,100)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
09 . 08 . 1940

மறைவு
30 . 09 . 2025

## பொன்னம்பலம் நீதிராஜா (நவரட்ணம்)

தாவடி தெற்கு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் நீதிராஜா அவர்கள் கடந்த (30.09.2025) செவ்வாய்க்கிழமை விண்ணகமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - பாக்கியம் தம்பதியரின் பாசமிகு மகனும், இந்திராணி மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சரோஜினிதேவி அவர்களின் அன்புக் கணவரும், சுதா (UK), உசா (ஜேர்மனி), இந்திரன் (UK), அமுதா (ஜேர்மனி), இராசன் (UK), கேதா (UK), தேவகுமார் (வைத்தியர், யாழ்ப்பாணம்), சத்தியா (ஆசிரியர், ஏஞ்சல் சர்வதேச பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், லோகநாதன், ராஜமோகன், நாகலோஜி, சுபாகரன், நவநீதரன், கிறிஸ்ரின், எலன்ரைன் ஆகியோரின் அன்பு மாமனாரும், மயூரன், தர்சிகா, கருணியா, நவீன், வேணுஜா, அபிநயா, அஜயன், ஐஸ்வர்யா, அக்ஷியா, கேஷியா, வைஷானா, டிஷான், ஜேன், ஈதன், எமி ஆகியோரின் பாசமிகு பேரனும், ரிஷ்வாவின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிஆராதனை நாளைமறுதினம் (05.10.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11:00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடியில் அமைந்துள்ள சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS/59552) J-1

# 31ம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
15 • 04 • 1953

மறைவு
05 • 09 • 2025

கடந்த 05.09.2025 அன்று இறைபதம் அடைந்த
எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு

## அமரர் Dr.விமலாதேவி தங்கவேல்

**(பதிவு வைத்திய அதிகாரி)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 03.10.2025 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். சபிண்டீகரண கிரியைகள் 05.10.2025 ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். இந் நிகழ்வில் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த் தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளம், துண்டுப் பிரசுரம், பனர்கள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் இன்னும் பல வேறு வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பு: தயவு செய்து இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**வேளீர் வாசம் சிங்கை நகர்,**
**புலோலி தெற்கு, புலோலி.**
**தொடர்பு - 0775355437**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 46369) E

# வலயக் கல்வி அலுவலகம் - தீவகம்
# அதிபர் பதவி வெற்றிடம் நிரப்புதல்

தீவக வலயத்திற்குட்பட்ட பின்வரும் பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

| இல | பாடசாலையின் பெயர் | பாடசாலை வகை | வெற்றிடம் ஏற்பட்ட திகதி |
|---|---|---|---|
| 01 | யா/நயினாதீவு ஸ்ரீகணேச கனிஸ்ட வித்தியாலயம் | Type -II | 2025.09.26 |
| 02 | யா/அனலைதீவு வடலூர் அ.த.க வித்தியாலயம் | Type -III | 2025.09.01 |
| | மீள் விண்ணப்பம் கோரப்படும் பாடசாலைகள் | | |
| இல | பாடசாலையின் பெயர் | பாடசாலை வகை | வெற்றிடம் ஏற்பட்ட திகதி |
| 01. | யா/மெலிஞ்சிமுனை றோ.க.த.க பாடசாலை | Type -III | 2025.07.25 |
| 02. | யா/சரவணை சின்னமடு றோ.க.த.க பாடசாலை | Type -III | 2025.06.30 |

மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு பின்வரும் நிபந்தனைகளுடன் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நிபந்தனைகள்

- விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது 03 வருடங்களாவது சேவையாற்றக்கூடிய வயதெல்லையை கொண்டிருத்தல் வேண்டும்.
- Type -II பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவை தரம் -II இனைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. இலங்கை அதிபர் சேவை தரம் -II இனைச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாத விடத்து மட்டும் அல்லது தெரிவுகள் எவையும் இடம் பெறாவிடத்து மட்டும் இலங்கை அதிபர் சேவை தரம் -III இனைச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.
- Type - III பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவை வகுப்பு III இனைச் சேர்ந்தவர் களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவங்களை தீவகக் கல்வி வலய நிர்வாகப்பரிவில் பெற்று பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 2025.10.15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக **"வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், தீவகம்,குறிகட்டுவான் வீதி, வேலணை"** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**வலயக் கல்விப் பணிப்பாளர்**
**தீவகம்.**

(CR/56334) J-1

# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் - 10, அராலி வீதி, 42/71 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம், இல - 39/1, அராலி வீதி, யாழ்ப்பாணத்தை நிரந்தர முகவரியாகவும் அரபா நகர், கொழும்பு வீதி, தில்லையடி, புத்தளத்தை தற்போதய முகவரியாகவும் கொண்ட நயினா முகமது மஃறூவ் என்பவர் 24.02.2003 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு M.M.M.றமீஸ் முகதாவில் 199ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம், குறித்த ஆதனம் 02.08.1989ல் நொத்தாரிசு M.M.மன்சூர் முகதாவில் சாதனம் ஒன்று நிறைவேற்றப்பட்டதாகவும் அக்காலப்பகுதியில் முஸ்லீம் சமூகத்தினர் பிரதேசத்தை விட்டு வெளியேற வேண்டிய நிலமை ஏற்பட்டது என்றும் காணிப்பதிவகத்தில் தேடுதல் செய்தும் அது தொடர்பான ஆவணங்கள் கிடைக்கவில்லை எனவும் குறிப்பிட்டு குறித்த ஆதனத்திற்கு தானே சொந்தக்காரர் எனவும் தனது ஆட்சிக்குட்பட்டது என்றும் வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த ஆதனத்தை, நயினா முகமது மஃறூவ்வும் பெண் மன்சுராவும் 08.02.2012 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் 8760ம் இலக்க அறுதி உறுதி மூலம் இல - 24/10A, அராலி வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசைப்பிள்ளை ஆனந்தநாதனும் பெண் நாகரெத்தினமும் ஆகியோருக்கு வழங்கியுள்ளனர்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று, வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை "தாண்டயன் வயலும் அம்மையன் வயலும் முள்ளி வயலும்" உத்தரவு பெற்ற அளவையாளர் எஸ்.தியாகராஜா பிரிவிட்டு வரைந்த 79ம் இலக்கப் படத்தில் துண்டு 4 எனச்சுட்டப்பட்ட பாகம் நெ.பர.1க்கு சமமான குளி (12) பண்ணிரண்டும், அதற்குச் சேர்ந்தவைகளும். இதற்கு எல்லைகள்:-

கிழக்கு :- வைரமுத்து சிவகுமாரின் ஆதனம்.
வடக்கு :- குறித்த படத்தில் துண்டு 3 எனச்சுட்டப்பட்ட பாகம்.
மேற்கு :- குறித்த படத்தில் துண்டு 5 எனச்சுட்டப்பட்ட பாதைக்காக ஒதுக்கப்பட்ட நிலம்.
தெற்கு :- குறித்த படத்தில் துண்டு 6 எனச்சுட்டப்பட்ட 10 அடி அகலமான பாதை நிலம் இதடங்களும்.

இன்னும் குறித்த படத்தில் துண்டு 5 துண்டு 6 எனச்சுட்டப்பட்ட பாதை நிலங்களை போக்குவரத்துக்காக பாவிக்கும் உரித்தும்.

தற்போது ஆசைப்பிள்ளை ஆனந்தநாதனும் பெண் நாகரெத்தினமும் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது ஆசைப்பிள்ளை ஆனந்தநாதனும் பெண் நாகரெத்தினமும் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**மாநகர முதல்வர்**
**யாழ் மாநகர சபை**

(CR 46400) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணத்தில் இருந்து இலங்கையில் உள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகிய வணிகப்பிரிவு மாணவர்களுக்கான கௌரவிப்பு தனியார் கல்விநிலையம் ஒன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் 50 மாணவர்கள் பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டனர். (எ-25-27)



சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது.
நிகழ்வில் ஆசிரியர் சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் கலந்துகொண்டு "மகாபாரதம்" எனும் தலைப்பில் தொடர் சொற்பொழிவு ஆற்றினார். (எ-41-66)

# முத்தமிழ் அரங்கம்

யாழ்ப்பாணம், ஒக்.3
யாழ்ப்பாணம் மணற்பகுதி புத்தூர் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய அறநெறிப்பாடசாலையின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட முத்தமிழ் அரங்கம் கடந்த சனிக்கிழமை வீனஸ் விளையாட்டுக்கழக அரங்கில் இடம்பெற்றது. அறநெறிப்பாடசாலையின் பொறுப்பாசிரியரான மு.ராஜவரோதயம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கோப்பாய் பிரதேச செயலகத்தின் இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி மகிந்தினி விஜயகுமார் கலந்துகொண்டார். நிகழ்வில் அறநெறி மாணவர்களின் தெய்வீக இசை, சிறுவர் நடனம், கோலாட்டம், திருக்குறள் ஓதுதல், "மண்ணுக்குள் மறையுண்டுபோனவை மறுபடியும் உயிர் பெறவேண்டும்" எனும் தலைப்பிலான கவியரங்கம், "புதியதோர் உலகம் செய்வோம்" எனும் சிறுவர் நாடகம், காத்தவராயன் சிந்துநடைக்கூத்து என்பன இடம்பெற்றன. (எ-41-27)



# அரச திணைக்களங்களுக்கிடையே கிரிக்கெட், கயிறு இழுத்தல் போட்டி

யாழ்ப்பாணம், ஒக்.3
உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை அஞ்சலகத்தினரால் வடமராட்சிக்கு உட்பட்ட அரசதிணைக்களங்களுக்கு இடையில் கிரிக்கெட் மற்றும் கயிறு இழுத்தல் போட்டிகள் நடத்தப்பட்டன. கிரிக்கெட் போட்டியில் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணியும், கயிறு இழுத்தல் போட்டியில் பருத்தித்துறை அஞ்சலகமும் முதலிடம் பெற்று வெற்றியைத் தழுவின. இரு அணிகளுக்குமான வெற்றிக்கேடயங்களை வடமாகாணப் பிரதி அஞ்சல்மா அதிபர் திருமதி நிவேதிகா கேதீசன் வழங்கினார். இதேவேளை கயிறு இழுத்தல் மற்றும் கிரிக்கெட் போட்டிகளில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனை அணி இரண்டாம் இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-25)





நெடுந்தீவுப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பயனாளிக்குப் பிரதேச செயலர் என்[illegible]. பிரபாகரனால் உதவிப்பொருள்கள் கடந்[illegible] திங்கட்கிழமை வழங்கப்பட்டன. தேசிய ஒருமைப்பாட்டுப் பிரிவின் ஓரங்கட்டப்பட்ட மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துதல் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ச-25,9)


முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் மற்றும் மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களமும் இணைந்து நடத்திய மாவட்ட தொழிற்சந்தை மாவட்டச்செயலர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் கடந்த திங்கட்கிழமை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சாவகச்சேரி அன்பொளி கல்விநிலையத்தின் 25ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு பிளாஸ்ரிக், பொலித்தீன்களை சேகரிக்கும் செயற்றிட்டம் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. சாவகச்சேரி தபாற்கந்தோர் முன்பகுதியில் ஆரம்பித்து பெருங்குளம் சந்திவரையான பகுதியில் இந்தச் செயற்றிட்டம் இடம் பெற்றது. (ச-159)






நவராத்திரி விரதத்தின் வாணி விழா நிகழ்வு நேற்று வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் சோமசுந்தரப் புலவர் அரங்கில் நடைபெற்றது. இதன்போது மாணவர்களது கலைநிகழ்வுகள் வெகுசிறப்பாக இடம்பெற்றதைத் தொடர்ந்து "நல்லது செய்தால் நல்லது நடக்கும் என்ற நம்பிக்கை அதிகரிக்கிறது, நல்லது செய்தால் நல்லது நடக்கும் என்ற நம்பிக்கை குறைகிறது" என்ற தலைப்பில் பட்டிமன்றம் இடம்பெற்றது. (ச-27)

## கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை பாலசுப்ரமணிய வித்தியாலயத்தில் பாடசாலை முதல்வர் செ. பகீதரன் தலைமையில் அண்மையில் கல்விக்கண்காட்சி இடம்பெற்றது. கண்காட்சியில் விருந்தினராக வலிகாமம் கல்வி வலய தொழில்நுட்பப் பாட ஆசிரிய ஆலோசகர் ப. அருந்தவம் கலந்து சிறப்பித்தார். (ச-159)

நவராத்திரியின் விஜயதசமி பூஜை வழிபாடு நேற்று வியாழக்கிழமை யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபனால் சிறார்களுக்கு ஏடு தொடக்கிவைக்கப்பட்டது. (ச-66)







வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் சிறுவர்தின நிகழ்வு கல்லூரியின் சோமசுந்தரப் புலவர் அரங்கில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. இதன்போது போதைக்குஎதிரானவிழிப்புணர்வு நாடகமும், "மாணவர்களின் முன்னேற்றத்துக்கு பெரிதும் பங்காற்றுவது பெற்றோர்களா?" ஆசிரியர்களா?" என்ற தலைப்பில் பட்டிமன்றமும் இன்னும் பல கலை நிகழ்வுகளும் நிகழ்த்தப்பட்டன. (ச-25, 27)





வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தின் சிறுவர் தினம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் தி. அபராஜிதன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வரணி வாண்மை விருத்தி மத்திய நிலைய விரிவுரையாளர் கு. நந்தகுமார், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றிய வாணிவிழா, மாவட்ட அந்தணர் ஒன்றிய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் மூத்த சிவாச்சாரியார்கள் முன்னிலையில் நாதஸ்வர கச்சேரி, பண்ணிசைகள், பரதநாட்டியம், வீணாகானம், பக்திபாடல்கள், பேச்சு பிரசங்கம் எனப் பல கலை நிகழ்வுகளும் கௌரவிப்பும் இடம்பெற்றது. (ச-25,9)

## விண்ணப்பத்...

கள் கோரப்பட்டுள்ளன. எதிர்வரும் ஒன்பதாம் திகதி நள்ளிரவு வரை விண்ணப்பிக்க முடியும் என்று ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே, விண்ணப்பத் திகதி நீடிக்கப்படாது என்று கல்வி அமைச்சு நேற்று விசேட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. (அ-ம)

## மூன்றாம்கட்ட...

செம்மணிப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுக்கான நிதியை வழங்கும் பட்சத்தில், எதிர்வரும் 21ஆம் திகதி பணிகளை ஆரம்பிக்க முடியும் என்று நீதிமன்றத்தில் உத்தேசத் திகதி வழங்கப்பட்டிருந்தது. எனினும், இன்றளவும் நிதி விடுவிக்கப்படவில்லை. எனவே, தொடர்ச்சியான அகழ்வுப் பணிகள் தொடர்பில் பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்ட நிலையிலேயே, நிதி விடுவிப்பு விரைவில் இடம்பெறும் என்று அமைச்சர் ஹர்ஷன கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மனிதப் புதைகுழிகள் எனச் சந்தேகிக்கப்படும் இடங்களில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான நிதி எமது அமைச்சிடம் உள்ளது. இந்தப் பணிகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதில் நாங்கள் அக்கறை கொண்டுள்ளோம். அதற்குரிய நடவடிக்கைகள் அனைத்தும் இடம்பெற்று வருகின்றன.

செம்மணி மனிதப் புதைகுழியை மூன்றாம் கட்டமாக அகழ்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான நிதி விடுவிப்பு இறுதிக்கட்டத்தில் உள்ளது. உரிய நடைமுறைகளை விரைவில் முழுமைப்படுத்தி, தேவையான நிதியை வழங்க நீதி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது - என்றார். (அ-ம)

## ஆபத்தான...

செயற்படுகின்றது. ஓகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்களிலேயே பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கம் பற்றி அதிகளவில் பேசப்பட்டது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையைத் திசை திருப்பும் நோக்கிலேயே இவ்வாறு செயற்பட்டனர்.

பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட்டாலும், அதைவிட பாரதூரமான சட்டமொன்றை கொண்டுவருவதற்கே ஆளுங்கட்சி முற்படுகின்றது. மன்னாரில் மக்கள் எழுச்சி ஏற்பட்டுள்ளது. அதாவது சிறிய நேபாளமாக மன்னார் மாறியுள்ளது. இவ்வாறான மக்கள் எழுச்சிகளை ஒடுக்குவதாக இருந்தால் ஆளுங்கட்சிக்கு அடக்குமுறையென்பது அவசியம். அதனால் தான் பயங்கரவாத தடைச்சட்டத்தை விடவும் பாரதூரமான சட்டத்தை கொண்டுவர முற்படுகின்றனர்.

அதேவேளை, மாகாணசபைத் தேர்தல்தொடர்பில் ஆளுங்கட்சி மௌனம் காக்கின்றது. எல்லை நிர்ணய விவகாரத்தைக் காண்பித்து இழுத்தடிப்பு இடம்பெறுகின்றது. கிரிக்கெட் மைதானத்தை அமைத்து வடக்கு மக்களை ஏமாற்றமுடியாது - என்றார். (அ-ம-44)

## பயங்கரவாதத்...

பெறும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் உதயனிடம் தெரிவித்தார்.

செப்ரெம்பர் மாத இறுதிக்குள் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் என்று அரசாங்கம் முன்னர் அறிவித்திருந்தது. எனினும், இன்றளவும் அவ்வாறான எந்தவொரு அறிவித்தலும் விடுக்கப்படவில்லை. இது தொடர்பில் உதயன் வினவியபோதே, இந்த மாதத்தின் இறுதிக்குள் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் என்று கூறியுள்ளார்.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் என்ற உறுதிமொழி எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கப்பட்டுள்ளது. விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வாக்குறுதிகளையும் நாங்கள் நிறைவேற்றியே தீருவோம். எனவே, பயங்கரவாதத்தடைச்சட்டமும் நீக்கப்படுவது உறுதி. அதைத் தக்க வைப்பதற்கான எந்த நோக்கமும் இல்லை - என்றார். (அ-ம-44)

## பருத்தித்துறை...

சேர்ந்த மீனவர்களின் வலைகள் அறுத்து அழிக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் இரவு அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களின் மீன்பிடி படகுகளாலேயே இந்த அழிவுகள் சம்பவித்துள்ளன.

கீரிமலைக்கும் மாதகலுக்கும் இடைப்பட்ட கடற்பரப்பிலேயே இந்த அழிவுகள் சம்பவித்துள்ளன என்று பருத்தித்துறை மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இது தொடர்பில் உரிய அதிகாரிகளிடமும், திணைக்களங்களிலும் முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறலை தடுத்து நிறுத்தியுள்ளதாக இலங்கை கடற்படையினரும், கடற்றொழில் அமைச்சரும் அண்மையில் தெரிவித்திருந்த நிலையிலேயே, இந்திய இழுவைப் படகுகள் மீண்டும் அத்துமீறி நுழைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-100)

## இவ்வருடத்தின்...

னோருக்கு மறுவாழ்வு வழங்கும் வகையில் மறுவாழ்வு நிலையத்தையும், உதவிநாடும் நிலையத்தையும் அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் ஆளுநரின் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் பணிப்பாளர் நாயகத்தின் பங்கேற்புடன், கடந்த ஜூலை மாதம் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் முன்னேற்றங்கள் தொடர்பில் இதில் கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது, புனர்வாழ்வு நிலையத்தை நிரந்தரமாக அமைப்பதற்கு மருதங்கேணிப் பிரதேச செயலாளர் பிரிவில் காணி ஒதுக்கப்பட்டு இதுதொடர்பான கடிதம் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

புனர்வாழ்வு நிலையம் நிரந்தரமாக அமைக்கப்படும் வரை கிளிநொச்சி கிருஷ்ணபுரத்தில் அல்லது முல்லைத்தீவில் அதை இயக்குவது தொடர்பாக ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், அங்குள்ள கட்டடங்கள் தொடர்பாக முழுமையான ஆய்வை மேற்கொள்வதற்காகத் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் குழுவினரும், வடக்கு மாகாணச் சுகாதார அமைச்சின் கீழான குழுவினரும் இணைந்து களப்பயணம் மேற்கொள்வதெனவும், இந்த ஆண்டு இறுதிக்குள் ஏதாவது ஓரிடத்தில் புனர்வாழ்வு நிலையத்தை ஆரம்பிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் குருநகரிலும், முல்லைத்தீவில் ஒட்டுசுட்டானிலும், மன்னாரில் முருங்கனிலும் அமைந்துள்ள மருத்துவமனைகளில் உதவிநாடும் நிலையங்கள் அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. குருநகர் மருத்துவமனையின் திருத்த வேலைகள் நிறைவுறுவதற்குக் கால அவகாசம் தேவை என்பதால் அதுவரை பிறிதொரு மருத்துவமனையில் உதவிநாடும் நிலையம் அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒட்டுசுட்டான் மற்றும் முருங்கன் மருத்துவமனைகள் தயார் நிலையிலுள்ளமையால் அவற்றில் உடனடியாக உதவி நாடும் நிலையங்களை ஆரம்பிப்பதற்கு வடக்கு மாகாண ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எஸ்.சத்திய சீலன், வடக்கு மாகாணச் சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் வி.பி.எஸ்.டி.பத்திரன, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவகலாநிதி த.சத்தியமூர்த்தி, வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாணச் சிறுவர் நன்னடத்தை திணைக்கள ஆணையாளர், யாழ்.மாவட்டச் செயலர், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலாளர்கள், யாழ்ப்பாணப் பிராந்தியப் பிரதிப் பொலிஸ்மா அதிபர், தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ-ம-26)

## பாதுகாப்புப்...

செய்யப்பட்டிருந்தார். நேற்றுமாலை கொழும்பு நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே, அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம)

## மதுசாரப்...

ஆதலால், மதுப் பாவனையைக் கட்டுப்படுத்த எதிர்வரும் பட்ஜெட்டில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் அந்த அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் போதைப்பொருள் தடுப்பு மையம் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் போதைப்பொருள் பாவனை அதிகரித்துச் செல்கின்றது. இலங்கையில் ஏற்படும் மரணங்களில் 83 வீதமானவை தொற்றா நோய்களால் ஏற்படுகின்றன. குறிப்பாக, மதுப் பாவனையால் தினமும் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் உயிரிழக்கின்றனர். ஒரு வருடத்தில் அண்ணளவாக 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழக்கின்றனர். எனவே, மதுசாரப் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்குத் தேசிய ரீதியிலான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் மதுசாரங்கள் மீதான வரியை கணிசமாக அதிகரிப்பதன் மூலம் இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த முடியும் - என்றார். (அ-ம)

## காற்றாலை...

காற்றாலை தொடர்பில் பொதுமக்களுக்கு உரிய தெளிவுபடுத்தலை வழங்கி, இந்தத் திட்டத்தைத் தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதையடுத்து, ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்குமாறு கோரி, மன்னார் மாவட்டச் செயலரிடம் அவர்களால் மனுவொன்றும் வழங்கப்பட்டது. (அ-ம-27-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

C M Y B

# காற்றாலைத் திட்டத்தை இடமாற்றவேண்டும் அரசு

*சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரிக்கை*

கொழும்பு, ஒக்.3
மன்னார்த்தீவுப் பகுதியில் அமைக்கப்படவுள்ள காற்றாலை மின்கோபுரங்களால் நிலத்தடி நீர் பாதிக்கப்படுவதுடன், சூழலுக்குப் பாதிப்பு ஏற்படும் என்று சமூக ஆர்வலர் களும், சூழலியலாளர்களும் கருத்துத் தெரிவித்துள்ள நிலையில், அரசாங்கம் தனது பிடிவாதத்தைக் கைவிட்டு மக்களின் வாழ்வியல் உரிமையை உத்தரவாதப்படுத்தவேண்டும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தியுள்ளார்.


இது தொடர்பில் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் மாற்று வலுசக்தியை வலுப்படுத்தும் முகமாக காற்றாலை மின் கோபுரங்கள், சூரியசக்தி மின் ஆலைகள் எனப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மன்னார்த் தீவு சுற்றிவர கடலைக் கொண்டிருப்பதன் காரணமாக காற்றாலைகளை அமைக்க அரசாங்கம் தனியார் துறைகளுக்கு ஊக்கமளித்துவருகின்றது.

மாற்றுவலுசக்திகள் தேவை என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் மக்கள் செறிவாக வாழும் பிரதேசங்களில் மிக அதிகப் படியான காற்றாலைகளை நிறுவுவது மக்களின் அன்றாட வாழ்வில் பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது என்பதும் உண்மையானது. ஒவ்வொரு காற்றாலை மின்கோபுரத்தை நிறுவும்பொழுதும் எழுபது அடிக்கு மேல் நிலம் தோண்டப்படுகின்றது. இதனால் நிலத்தடி நீர் மாசுபடும்.

அரசாங்கம் இவற்றைப் புரிந்துகொண்டு ஆட்சியாளர்கள் தேர்தல்காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளையும் மன்னார் மக்களின் நியாயமான கோரிக்கைகளையும் கவனத்தில் எடுத்து ஏனைய காற்றாலை மின்கோபுர அமைப்புகளை வேறு பொருத்தமான இடங்களுக்கு மாற்றுவதே சிறந்ததெனக் கருதுகிறோம் - என்றுள்ளது. (எ-இ)

# மகாத்மாகாந்தி ஜனனதினம் யாழ்.நகரில் கடைப்பிடிப்பு!



யாழ்ப்பாணம்,ஒக்.3
அகிம்சாவாதியான மகாத்மா காந்தியின் 156ஆவது ஜனனதின நிகழ்வு நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள உருவச்சிலையடியில் யாழ்.இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இதன்போது காந்தியின் உருவச்சிலைக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு தொடர்ந்து அவரது உருவப்படத்துக்கு மலர்கள் தூபி அஞ்சலி செலுத்தப்பட்டது. அத்துடன் காந்தீயம் வருடாந்தச் சஞ்சிகையும் வெளியிட்டுவைக்கப்பட்டது.

நிகழ்வில் யாழ்.மறை மாவட்டக் குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார், யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் சாய் முரளி, வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன், வவுனியாப் பல்கலைக்கழக வேந்தர் எஸ்.மோகனதாஸ், யாழ்.மாநகரசபையின் பிரதி முதல்வர் இம்மானுவேல் தயாளன், யாழ்.இந்தியத் துணைத்தூதரக உத்தியோகத்தர்கள் மற்றும் ஆர்வலர்கள் கலந்துகொண்டனர். (ச-66,17,20,9)

# அநுர அரசின் ஆட்சியிலேயே மக்களுக்கு முழுச்சுதந்திரம்!

*ஆளுங்கட்சி தெரிவிப்பு*

யாழ்ப்பாணம்,ஒக்.3
எமது அரசாங்கத்தின் ஆட்சியிலேயே மக்களுக்குப் பூரண சுதந்திரம் கிடைத்துள்ளது. நினைவேந்தல்களை நடத்த, கருத்துகளை வெளியிட, போராட்டங்களை நடத்தவென பூரணமான சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. ஊடக சுதந்திரமும் முன்னரைவிடத் தற்போது அதிகமாகக் கிடைத்துள்ளது என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் கடந்த ஒரு வார காலமாக தியாகி திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

நினைவிடத்துக்குச் சென்ற என்னைச் சிலர் தடுத்தனர். இறுதிநாள் நிகழ்வில் ஒருவர் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்துள்ளார். இதற்கு அரச தரப்பினர் காரணம் என்று தேசியவாதிகள் சிலர் நினைக்கின்றனர். இந்தச் சம்பவத்துக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் எந்த ஒரு சம்பந்தமும் கிடையாது. கடந்த காலங்களைப் போன்று புலனாய்வுப் பிரிவினராலும், இராணுவத்தினராலும், பொலிஸாராலும் நினைவேந்தல்களுக்கு எந்தவித இடையூறும் விளைவிக்கப்படுவதில்லை. ஆனால் சிலர் அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களை எதிர்க்கின்றனர். அரசாங்கத்தின்மீது பழிபோடுகின்றனர்- என்றார். (சு-20)

# சர்வமத பேரவையின் சர்வமத மாநாடு நாளை

யாழ்ப்பாணம், ஒக்.3
யாழ்.மாவட்ட சர்வமதப் பேரவையின் ஏற்பாட்டில், சர்வ மத மாநாடு யாழ். திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணி வரை நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்தியத் துணைத்தூதுவர் சாய்முரளி, பிரதம உரையாளராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராசா ஆகியோர் கலந்துகொள்வர்.

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன், நாகவிகாரை பிரதம குரு மீஹாஹயண்துரை சிறிவிமல தேரர், யாழ்.மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, இமாம் சிவலப்பள்ளி காஷ்மி மௌலவி அல்ஹாபிழ் ஏ.எம்.றழீம் ஆகியோர் கலந்துகொள்வர். கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்டச் செயலர் ம.பிரதீபன், சிவசேனை அமைப்புத் தலைவர் க.சச்சிதானந்தன், நாகவிகாரை உப குரு கொங்கால சிறிதம்ம தேரர், அங்கிலிக்கன் திருச்சபை குரு முதல்வர் அருட்பணி எஸ்.டி.பி செல்வன், இமாம் சிவலப்பள்ளி காஷ்மி மௌலவி அப்துல் அஸீஸ், தேசிய சமாதானப் பேரவைத் தலைவர் ஜெகான் பெரேரா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர் (ச-25)

## மணல் விற்பனைக்கு

கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற மணல் விற்பனைக்கு உண்டு.

* தென்மராட்சி 50,000
* யாழ்மாவட்டம் 55,000
* வடமராட்சி 55,000

விநியோகிக்கப்படும். மற்றும் கனரக வாகனங்களுக்கு யாழ். மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம் போட்டு தரப்படும்.

தொடர்புகளுக்கு: 076 324 9977

யாழ்.பல்கலை நுண்கலைப்பீடத்துக்கு

# இசைத்துறைத் தலைவர் ரொபேர்ட் புதிய பீடாதிபதியாகத் தெரிவு!




யாழ்ப்பாணம், ஒக்.3
சேர். பொன்னம்பலம் இராமநாதன் ஆற்றுகை மற்றும் காண்பியக் கலைகள் பீடத்தின் பீடாதிபதியாக இசைத்துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான த.ரொபேர்ட் அருட்சேகரம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். முன்னாள் பீடாதிபதி எஸ். சிவரூபனின் பதவிக்காலம் நிறைவுக்கு வருவதைத் தொடர்ந்து, புதிய பீடாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான பீடச் சபைக் கூட்டம் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதில் இடம்பெற்ற தேர்தலில் தற்போதைய இசைத்துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான த.ரொபேர்ட் அருட்சேகரம் பீடாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார். அடுத்து வரும் மூன்று ஆண்டுகளுக்கு த.ரொபேர்ட் அருட்சேகரம் பீடாதிபதியாகச் செயற்படுவார். (ச-இ)

## பணியாளர் தேவை

யாழ். நகரில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்கு இரவு நேர எழுதுவினைஞர் - ஆண்கள் (கணினி அறிவு உடையவர்கள்) தேவை. நேரில் சமுகம்தரவும்



உதயன்

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org